# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 14,879/4 — 1969 නොවැම්බර් 14 වැනි සිකුරාදා — 1969.11.14

14,879/4 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

ம. தே. அ. எண். சீ. 162/49 (8)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 51 ஆம் பிரிவின்படி, தேசியமயச் சேவை அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் வீ. எம். பீரிஸ் அவர்களை உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் ஈ. ஜி. குணவர்தன அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1969 நவெம்பர் 18 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் உள்ளூராட்சி அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராகவும் கடமையாற்றும்படி மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அதி உத்தமரின் கட்டளைப்படி,

ஏ. பி. எல்கடுவே,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1969 நவெம்பர் 14.

11—276/1.

---

ம. தே. அ. எண். சீ. 162/49 (8)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 51 ஆம் பிரிவின்படி, சௌக்கிய சேவை அதிபதி, டொக்டர் டி. பி. குணசேகரா அவர்களை, சௌக்கிய அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் சீ. பாலசிங்கம் அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1969 நவெம்பர் 13 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் சௌக்கிய அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராகவும் கடமையாற்றும்படி மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதி உத்தமரின் கட்டளைப்படி,

ஏ. பி. எல்கடுவே,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1969 நவெம்பர் 14.

11—276/2.

---

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி 477. — உப உணவுப்பொருட்கள்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவு) விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, (உணவு) விலைக் கட்டுப்பாட்டதிகாரி, புவனேகபாகு பியன்கே விக்டர் அலெக்சாண்டர் யஸ்ரின் பூர்ணவன்ச சேனாரட்னே ஆகிய யான், இக்கட்டளையால்—

(1) 1969 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் தேதி வெளியான 14,878/1 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1969 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் தேதியைக் கொண்ட சி 475 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையை யாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத் திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத் திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்கு பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டு மென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப் பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1969 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ந் திகதியன்று பிற்பகல் 4 மணிக்குக் கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

பீ. பி. வி. ஏ. ஜே. பி. சேனாரட்னே,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

## அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய இறக்கு மதி விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| கொத்தமல்லி .. .. .. | — | .. 82 0 | .. 0 84 |
| சிறு வெண்காயம் .. .. .. | — | .. 24 0 | .. 0 28 |
| வெண்காயம் (சிறு வெண்காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) | 30 50 | .. 32 0 | .. 0 34 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலையென்பது 10 அந்தரும் அதற்கு மேற்பட்ட எடையுடைய விற்பனையைக் குறிப்பதாகும்.

11—277.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.